# விரைவான காப்பூக்கிச் சுய-சோதனைகள்

ஓர் உடனடி வழிகாட்டி

**Rapid antigen self-tests**

A quick guide Tamil | தமிழ்

**மேலும் தகவல்கள்**

கொரோனா வைரஸ் துரித இணைப்பு (Coronavirus Hotline) - 1800 675 398

**அல்லது**

www.coronavirus.vic.gov.au/getting-tested

## விரைவான காப்பூக்கிச் சோதனை (rapid antigen test) என்றால் என்ன?

உங்களுக்கு கோவிட்-19 இருக்கக்கூடுமா என்பதைச் சரிபார்க்க வீட்டிலேயே விரைவான காப்பூக்கிச் சோதனைகளைப் (Rapid antigen tests) பயன்படுத்த முடியும். பெரும்பாலான விரைவான காப்பூக்கிச் சோதனைகள், 15 முதல் 30 நிமிடங்களில் ஒரு முடிவை உங்களுக்கு வழங்கும். உமிழ்நீரைப் பயன்படுத்தும் விரைவான காப்பூக்கிச் சோதனையைச் (saliva rapid antigen test) செய்வதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னால், சாப்பிடவோ குடிக்கவோ வேண்டாம்.

**உங்கள் சோதனையை எவ்வாறு செய்வது என்பது குறித்த வழிமுறைகளை எப்பொழுதும் பின்பற்றவும், அத்துடன் உங்கள் விரைவான காப்பூக்கிச் சோதனைக் கருவியில் (rapid antigen test kit) இணைக்கப்பட்ட காணொளிகளைக் கவனமாகப் பார்க்கவும்.**

ஒரு கோவிட்-19 சோதனைத் தளத்தில் நீங்கள் பெறக்கூடிய வழக்கமான (பி.சி.ஆர்.) சோதனை ஒன்றை விட இந்தச் சோதனைகள் வேகமானவை ஆனால் குறைந்த அளவு துல்லியமானவை.

தற்போது இரண்டு வகையான விரைவான காப்பூக்கிச் சோதனைகள் உள்ளன:

- உமிழ்நீர் - இந்த சோதனையானது, ஒரு குழாயினுள் துப்புவது அல்லது ஒரு பஞ்சு ஒற்றி (swab) உறிஞ்சுவதை உள்ளடக்கியது.
- நாசி பஞ்சு ஒற்றி - இந்த சோதனையானது, ஒவ்வொரு நாசியையும் ஒற்றுவதை உள்ளடக்கியது.

## விரைவான காப்பூக்கிச் சோதனையை எப்போது பயன்படுத்த வேண்டும்

விரைவான காப்பூக்கிச் சோதனைகள் பின்வரும் சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படலாம்:

- உங்களுக்கு நோயறிகுறிகள் இருந்தால்
- கோவிட் சோதனையில் நேர்மறையான முடிவு வந்துள்ள ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தால் (வீடு, கல்வி, பணியிடம் அல்லது சமூகம்)

- உங்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்று இருக்கக்கூடுமா என்பதை விரைவாகச் சரிபார்க்க விரும்பினால்
- உங்கள் பள்ளி அல்லது முதலாளியால் ஏற்பாடு செய்யப்பட்டதைப் போன்ற, ஒரு கண்காணிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக
- விக்டோரிய சுகாதாரத் திணைக்களம் பரிந்துரைக்கும் போது

## ஒரு வழக்கமான (பி.சி.ஆர்.) சோதனையை எப்போது பெறுவது

பின்வரும் சூழ்நிலையில், நீங்கள் பரிசோதனைத் தளம் ஒன்றில், ஒரு வழக்கமான (பி.சி.ஆர்.) சோதனையை மேற்கொள்ள வேண்டும்:

- நோயறிகுறிகள் இருந்தால், அல்லது கோவிட் நோயாளி ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தால், மற்றும் விரைவான காப்பூக்கிச் சோதனை (rapid antigen test) ஒன்றைப் பெற முடியாதபோது
- உங்களிடம் அறிகுறிகள் இல்லையென்றால், மேலும் நோயாளி ஒருவருடன் தொடர்பு இல்லாதவராக இருந்தால், ஆனாலும் விரைவான காப்பூக்கிச் சோதனை (rapid antigen test) ஒன்றில் உங்களுக்கு நேர்மறையான முடிவு வந்திருக்கும்போது
- வேறுவிதமாகச் சுகாதாரத் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்படும்போது

## விரைவான காப்பூக்கிச் சோதனை ஒன்றை எங்கே பெறலாம்

சில பல்பொருள் அங்காடிகள் (supermarkets), மருந்தகங்கள் (pharmacies), தேர்ந்தெடுக்கப்பட்ட சோதனைத் தளங்களில் இருந்து விரைவான காப்பூக்கிச் சோதனைகள் (rapid antigen tests) கிடைக்கின்றன (உங்களுக்கு அருகாமையில் உள்ள சோதனைத் தளத்தை நீங்கள் பின்வரும் இணையதளத்தில் கண்டறியலாம்: https://www.coronavirus.vic.gov.au/where-get-tested-covid-19) அல்லது இணையத்தில் (online) காணலாம்.

மேலதிகத் தகவல்கள், https://www.coronavirus.vic.gov.au/checklist-contacts என்ற இணையதளத்தில் உள்ளன.

## உங்கள் விரைவான காப்பூக்கிச் சோதனையை (rapid antigen test) எவ்வாறு சேமித்து வைப்பது

- சோதனைக் கருவியை (test kit) குளிர்ந்த, உலர்ந்த இடத்தில் (30 °C க்குக் குறைவான வெப்பநிலையில்) சேர்த்து வைக்கவும்.
- கருவியையோ அல்லது அதன் பாகங்களையோ உறையவிட வேண்டாம்
- சோதனைக் கருவியை நேரடியாகச் சூரிய ஒளி படும் இடத்தில் வைக்க வேண்டாம்

# உங்கள் விரைவான காப்பூக்கி முடிவின் (rapid antigen result) பொருள் என்ன?

| சோதனை முடிவு | அதன் பொருள் என்ன | அடுத்து என்ன செய்வது |
|---|---|---|
| **எதிர்மறை**<br> | குறிப்பாக உங்களுக்கு நோயறிகுறிகள் எதுவும் இல்லாவிட்டால், உங்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்று இருப்பதற்கான சாத்தியமில்லை. | நோயறிகுறிகளைக் கண்காணிக்கவும் |
| **நேர்மறை**<br> | உங்களுக்கு கோவிட்-19 இருக்கும் சாத்தியமுண்டு. | • சேவை விக்டோரியா செயலியின் (Service Victoria app) மூலமாகவோ, அல்லது www.coronavirus.vic.gov.au/report என்ற இணையதளத்துக்குச் சென்றோ, உங்கள் சோதனை முடிவைத் தெரிவிக்கவும்<br>• ஏழு நாட்கள் தனிமைப்படுத்திக் கொண்டு, உங்களுடன் தொடர்பில் இருந்தவர்களிடம் (contacts) கூறவும். |
| **செல்லுபடியாகாது**<br> | சோதனை வேலை செய்யவில்லை.<br><br>நீங்கள் சோதனையை மீண்டும் செய்ய வேண்டும். | **நீங்கள் சோதனையை திரும்பவும் செய்ய வேண்டிவரும்.**<br>மீண்டும் செல்லுபடியாகாது?<br>• வழக்கமான கோவிட் (பி.சி.ஆர்.) சோதனை ஒன்றை மேற்கொள்ளவும்.<br>நேர்மறை?<br>• நேர்மறை முடிவின் விதிமுறைகளின்படி.<br>எதிர்மறை?<br>• எதிர்மறை முடிவின் வழிமுறைகளின்படி. |

# முடிவுகளைப் பதிவு செய்தல்

விரைவான காப்பூக்கிச் சோதனை (rapid antigen test) ஒன்றில் உங்களுக்கு நேர்மறையான முடிவு வந்திருந்தால், நீங்கள் ஒரு நோயாளி. உங்களது விரைவான காப்பூக்கிச் சோதனையின் (rapid antigen test) நேர்மறையான முடிவை உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில், நீங்கள் கட்டாயம் தெரிவிக்க வேண்டும். உங்கள் முடிவைத் தெரிவிக்க, கொரோனா வைரஸ் துரித இணைப்பை (Coronavirus Hotline) 1800 675 398 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது இந்த இணையப் படிவத்தை நிரப்பவும்: www.coronavirus.vic.gov.au/report

Authorised and published by the Victorian Government, 1 Treasury Place, Melbourne.

© State of Victoria, Australia, Department of Health, January 2022.